நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகம்
எம்.ஆர்.சி. நகர், சென்னை 600 028

ந.க.எண்.2091/2020/டிபி3 நாள். 28 .04.2020

## சுற்றறிக்கை

பொருள்: தணிக்கை–நகராட்சி நிர்வாகம்–கட்டிட அனுமதி வழங்கும் போது வசூலிக்கப்பட வேண்டிய உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக்கட்டணம் தொகை வசூலிக்கப்படாதது–குறைபாடு–செலுத்தப்படாத தொகையில் ஓய்வுபெறும் அலுவலர் செலுத்த வேண்டிய சதவீதம் தெரிவித்தல்– தொடர்பாக.

பார்வை: 1) ஆணையாளர், வேலூர் மாநகராட்சி கடிதம் நாள். 27.04.2020.
2) இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2091/2020/டிபி3 நாள்.06.03.2020

*****

பார்வை 1 ல் காணும் கடிதத்தில், மாநகராட்சி ஆணையாளர் தமது கடிதத்தில் கட்டிட அனுமதி வழங்கும் சமயத்தில் வசூலிக்கப்பட வேண்டிய உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக்கட்டணம் வசூலிக்கப்படவில்லை என குறிப்பிட்டு தணிக்கை தடை எழுப்பப்பட்டுள்ளதாகவும், அவ்வாறான குறைபாடுகளுக்கு வசூலிக்கப்படாத மொத்த தொகையில் ஆணையாளர் செலுத்த வேண்டிய பங்கு தொகையை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தெரிவிக்குமாறு கோரியுள்ளார்.

பார்வை 2 ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட அனுமதி மறுக்கப்படும் இனங்களுக்கு உள்கட்டமைப்பு கட்டணம், தொழிலாளர் நல நிதி கட்டணம், கட்டிட அனுமதி கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் வசூல் செய்வது குறித்து தெளிவுரைகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய நடைமுறையில், கட்டிட அனுமதி வழங்கிட நகரமைப்பு ஆய்வாளரால் இடம் ஆய்வு செய்யப்பட்டு கட்டிட அனுமதி வழங்குவதற்கு செலுத்தப்பட வேண்டிய அனைத்து கட்டணங்களும் கணக்கீடு செய்யப்பட்டு அனுமதி வழங்க நகரமைப்பு அலுவலர் பணியிடம் உள்ள நகராட்சிகளில் நகரமைப்பு அலுவலர்களின் வழியாக பரிந்துரை செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் ஆணையாளர் ஒப்புதல் வழங்கிய பின்னர், கட்டணங்கள் அனைத்தும் வசூலிக்கப்பட்ட விவரங்களை சம்மந்தப்பட்ட எழுத்தர் சரிபார்த்து உறுதி செய்த பிறகு இறுதி உத்தரவு வழங்கப்பட்டு வருகிறது.

காலங்கடந்த வரியினங்கள் குறித்து ஏற்படும் வருவாய் இழப்பிற்கு காரணமாக இருந்த அலுவலர்களுக்கு பொறுப்பு தொகை நிர்ணயம் செய்து இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.37667/92/ஆர்1 நாள்.23.06.1993 வாயிலாக வசூலிக்கப்படாத இழப்பு தொகையினை வசூலிக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கட்டிட/திட்ட அனுமதி வழங்கப்பட்ட நேர்வுகளில் சட்டரீதியாக வசூலிக்கப்பட வேண்டிய கட்டிட அனுமதி கட்டணம் மற்றும் அனுமதி சார்ந்த இதர

கட்டணங்கள் குறைவாக அல்லது வசூலிக்கப்படாமல் தணிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருப்பின், ஏற்படும் வருவாய் இழப்பிற்கு காரணமாக இருந்த அலுவலர்களுக்கு கீழ்கண்டவாறு பொறுப்பு நிர்ணயம் செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

| வ.எண் | பெயரும் பதவியும் | | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | **நகரமைப்பு தொழில் நுட்ப அலுவலர்**<br>அ. நகரமைப்பு அலுவலர்<br>ஆ. உதவி நகரமைப்பு அலுவலர்<br>இ. நகரமைப்பு ஆய்வாளர் | 15%<br>20%<br>40% | 75% |
| 2. | **இருக்கை எழுத்தர் / உதவியாளர்** | | 20% |
| 3. | **ஆணையாளர்** | | 5 % |
| | | **மொத்தம்** | **100%** |

நகரமைப்பு அலுவலர் மற்றும் உதவி நகரமைப்பு அலுவலர் பணியிடம் இல்லாத நகராட்சிகளில் மேற்காணும் இழப்பிற்கான பொறுப்பு நகரமைப்பு ஆய்வாளரையே சாரும்.

மேலும் தணிக்கையின் போது பணியாற்றும் ஆணையாளர் உரிய காலங்களில் தக்க நடவடிக்கை மேற்கொண்டு ஆவணங்களை தணிக்கைக்கு காண்பிப்பதும் தணிக்கை தடைகளில் குறிப்பிட்டுள்ள குறைகள் மற்றும் இழப்புகளை வசூலிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்து தடையினை நிவர்த்தி செய்வதும், ஆணையாளரின் கடமையாகும் எனவும் இதன் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது.

28/4/20

நகராட்சி நிர்வாக ஆணையாளருக்காக

28/4/2020

**பெறுநர் :–** 1) அனைத்து நகராட்சி ஆணையாளர்கள்
2)அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்

**நகல் :–** இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை